**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 79/2018

நாள்: 11.11.2025

பெயர்: அடைக்கலம் (வா.சா.1) த/பெ: லாரன்ஸ்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

தாவா சொத்தில் தற்போது 2 வீடு உள்ளது. அதில் ஒரு வீடு ஆஸ்பெட்டாஸ் ஷீட் போட்டது. மற்றொரு வீடு கட்டப்பட்டுள்ளது. அது மெத்தை வீடு. ஆனால் முழுவதுமாக கட்டி முடிக்கப்படவில்லை. மெத்தை வீட்டை பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து 2017ல் கட்டியுள்ளார்கள். தென்புறம் கடைசியில் உள்ள ஆஸ்பெட்டாஸ் ஷீட் போடப்பட்ட வீடும் சுமார் 2014ம் வருடம் கட்டப்பட்டது. ஆஸ்பெட்டாஸ் ஷீட் போட்ட வீட்டிற்கு கதவு எண் உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதில் 1ம் பிரதிவாதியின் அம்மா குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.எனது பெரியம்மாவிற்கு 5 வாரிசுகள் உள்ளார்கள். சாலமன் சந்தியாகுராஜ், ஆல்பர்ட் வின்சன், பௌன்ராஜ் (என்னும் நபர் இறந்துவிட்டார்). ராணி என்கிற சலித்மேரி மற்றும் ஒரு நபர் கலீஸ்டா. 1ம் பிரதிவாதியின் கணவரான எனது பெரியப்பா தற்போது உயிருடன் இல்லை. ஆரோக்கியசாமி என்பவரின் சகோதரர்தான் எனது அப்பா. அவர் தையல் தொழில் வேலை செய்து வருகிறாரா என்றால் எனது அப்பா விவசாயி அவருக்கு தையல் தொழிலும் தெரியும். தாவா சொத்து பட்டா வகையை சேர்ந்ததா என்றால் சரிதான். தாவா சொத்து பயிர் நிலம் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே அது பயிர் செய்த இடம் தற்போது அது வீடு மற்றும் மனையாக உள்ளது. தற்போது தாவா சொத்தை வருவாய் ஆவணங்கள்படி நத்தமாக உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவை கேட்டால் தான் குடும்ப சொத்துக்கள் எவ்வளவு உள்ளது என்பது குறித்து தெரியும். குடும்ப சொத்துக்களை பொறுத்து எனது அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் பாக பிரிவினை ஏற்பட்டுள்ளது. எந்த வருடம் ஏற்பட்டது குறித்து தெரியுமா என்றால் 1985 ம் வருடம் ஏற்பட்டதாக செவி வழியாக கேள்விபட்டேன். அதில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் பிரிக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியும். பாகம் பிரித்து கொண்டதற்கு ஏதேனும் ஆதரவுகள் ஏற்பட்டதா என்பது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவைதான் கேட்க வேண்டும். வாய்மொழியாக அனுபவித்து வருகிறார்கள் என்பது

குறித்து எனக்கு தெரியும். தாவா சொத்துக்கு கிழக்குபுற சொத்தை பொறுத்து அ.வ.எண்.73/2006 என வழக்கு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கு அந்தோணிசாமி என்பவர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எங்களை தரப்பினர்களாக சேர்த்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கின் பிரதிவாதிகள் தான் அந்த வழக்கிலும் பிரதிவாதிகள் ஆவார்கள். அந்த வழக்கு அந்தோணிசாமி என்வருக்கு ஆதரவாக முடிக்கப்பட்டது.

ஒப்பம்/– அடைக்கலம்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/– S. தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
**ஜெயங்கொண்டம்**